


கிட்டத்தட்ட பத்தாண்டு காலம் நடைபெற்ற ஆப்கன் - சோவியத் யுத்தத்தைத் தொடாமல், உலகில் உள்ள பெரும்பாலான தீவிரவாத இயக்கங்களின் பிறப்பையும் செயல்பாட்டையும் பற்றிப் பேசவே முடியாது. தொட்டுத்தொட்டு ஏதாவது ஒரு வகையில், அத்தனை இயக்கங்களும் ஆப்கனிஸ்தானுடன் ஒரு தொடர்பு வைத்திருக்கிறது. ஆயுதத் தொடர்பு இல்லாது போனாலும் போதைத் தொடர்பாவது. அதுவும் இல்லாவிட்டால், அனுதாபத் தொடர்பாவது.

உலக அளவில் இன்று ஒரு பூதம் மாதிரி எழுந்து நின்று கொண்டிருக்கும் பயங்கரவாதத்தின் வேர், எங்கே இருக்கிறது என்று தேடிக்கொண்டு போனால், ஆப்கனிஸ்தானிலும் அங்கு நடைபெற்ற அந்த யுத்தத்திலும் அதற்கு தூபம் போட்டு வளர்த்துவிட்ட அமெரிக்காவிலும்தான்.

இருக்கட்டும். நாம் இப்போது ஜமா இஸ்லாமியாவைக் கவனித்துக் கொண்டிருக்கிறோம். தனது தொண்டர்களை ஆப்கனிஸ்தானிலிருந்து கண்டுபிடித்து அழைத்து வந்த ஜமா இஸ்லாமியா. ஒரு வகையில், இந்தோனேஷியாவை மத்தியக் கிழக்கின் ஏனைய அனைத்துத் தீவிரவாத போராளி இயக்கங்களுடனும் நெருக்கமான தொடர்பு கொண்ட தேசமாக மாற்றம் கொள்ளச் செய்ததற்கு, இந்த ஆப்கன் தொடர்புதான் அதிமுக்கியக் காரணம்.

அவரவர் தேசங்களிலிருந்து தன்னார்வப் போராளிகளாக ஆப்கனிஸ்தானுக்கு வந்து பத்தாண்டு காலம் தங்கி, பயிற்சி பெற்று, யுத்தத்தில் பங்கேற்ற காலத்தில் இந்தப் போராளிகளிடையே நெருக்கமும் நட்பும் உருவானது. பெரும்பாலும் அப்போது அவர்கள் யாரும் எந்த இயக்கத்தையும் சேர்ந்தவர்கள் அல்லர். வெறும் தன்னார்வலர்கள். லாரி கிடைத்தால் ஏறி கட்சிக் கூட்டங்களுக்குப் போகிற அப்பாவிகள் போல, ஆப்கனுக்குப் போய் யுத்தம் புரிந்தவர்கள்.

அட, இத்தனை ஆயிரம் பேர் ஆர்வமுடன் புனிதப்போர் புரிய வருகிறார்களே என்று கவனித்து, அந்தச் சந்தர்ப்பத்தை விடாமல் பயன்படுத்திக்கொள்ள நினைத்ததன் பேரில்தான், அல் காயிதா போன்ற இயக்கங்கள் தோன்ற ஆரம்பித்தன. அந்தந்த தேசங்களின் அரசியல் சூழ்நிலை, நெருக்கடிகளின் அடிப்படையில் ஆங்காங்கே வேறு பல இயக்கங்கள் உருவாயின. லெபனானில் ஹிஸ்புல்லா, பாலஸ்தீனில் பல்வேறு இயக்கங்கள், ஈரானில் சில ஷியா இயக்கங்கள், இராக்கியப் போராளி அமைப்புகள், சவூதி அரேபிய கெரில்லாப் படைகள், போஸ்னியாவில் பல்வேறு ஆயுத அமைப்புகள், இந்தோனேஷியாவில் ஜமா இஸ்லாமியா, இன்ன பிற தேசங்களில் இன்னபிற அமைப்புகள்.

'ரமணா' படம் ஞாபகம் இருக்கிறதா? காலேஜ் புரொ.ஃபசர் விஜயகாந்திடம் படித்து, பல்வேறு இடங்களில் பணியாற்றப் போகிற மாணவர்கள் ஒருங்கிணைந்து ஒரு காரியம் செய்யவேண்டுமென்றால், வரிந்து கட்டிக்கொண்டு வந்தார்கள் இல்லையா?

அதே மெக்கானிசம்தான். ஆப்கன் யுத்தத்துக்குப் பிறகு, பல்வேறு தேசங்களுக்குப் போய் பல்வேறு அமைப்புகளைத் தோற்றுவித்து, இந்தப் போராளிகள் செயல்பட ஆரம்பித்த பிறகு, ஓர்

அவசர ஆத்திரமென்றால், ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செய்ய உடனே முன்வந்துவிடுவார்கள். எல்லாம் பழைய பாசம், பழைய நட்பு.

இதனைத்தான் நெட் ஒர்க் என்று பின்னாளில் சொல்லத் தொடங்கினார்கள்.

ஜமா இஸ்லாமியா தோன்றியபோது, அதன் முதல் பலம் இந்த நெட் ஒர்க்காகத்தான் இருந்தது. ரிதுவன் இஸாமுத்தீன் என்கிற ஹம்ப்அலிக்கு, ஒசாமா பின்லேடன் முதல் அத்தனை மூத்த போராளி இயக்கத் தலைவர்களுடனும் மிக நெருக்கமான தொடர்பு உண்டு. ஜமாவின் ஸ்தாபகரான பஷீருக்கு இது மிகப்பெரிய ஆச்சர்யம். நினைத்த மாத்திரத்தில் உலகின் எந்த மூலையில் உள்ள இயக்கத்துடனும் ஹம்ப்அலியால் தொடர்புகொள்ள முடிந்தது. என்ன காரியத்தை வேண்டுமானாலும் சாதித்துக் கொள்ள முடிந்தது.

அதற்கு முன்னால், ஒரு சில ஆயுதங்கள் வேண்டியிருந்தால் கூட, மிகப்பெரிய அளவில் மெனக்கெட்டால்தான் சாத்தியம் என்றிருந்த பஷீருக்கு, ஹம்ப்அலியின் வரவுக்கும் ஈடுபாட்டுக்கும் பிறகு, என்ன நினைத்தாலும் முடியும் என்கிற நிலைமை உண்டானதில் மிகப்பெரிய மகிழ்ச்சி. குறிப்பாக, ஆப்கன் யுத்தத்துக்குச் சென்ற போராளிகளில் பலர், அமெரிக்கத் தயாரிப்பான இயந்திரத் துப்பாக்கிகளைக் கணிசமாகக் கொண்டு வந்திருந்தார்கள். தவிரவும் கண்ணி வெடிகள், இதர சில குண்டுகள், கைத்துப்பாக்கிகள் என்று அவர்கள் எடுத்து வந்திருந்த பல ஆயுதங்கள், ஜமா இஸ்லாமியாவின் தொடக்க கால 'வளர்ச்சி'க்குப் பேருதவி புரிபவையாக இருந்தன.

அது மட்டுமில்லாமல், ஹம்ப்அலி இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தன்னுடைய முதல் பங்களிப்பாக பாகிஸ்தானிலிருந்து வந்த ஒரு கப்பலில், பதினேழு பெட்டிகள் ஆயுதங்கள் வரவழைத்து பஷீரிடம் ஒப்படைத்தார். இதனாலெல்லாம் வளர்ந்த ஹம்ப்அலியின் செல்வாக்கு, மிக விரைவில் அவரை ஜமா இஸ்லாமியாவின் ராணுவத் தலைவராக உயர்த்தியது. அதுவரை ஆயுதங்கள் கிடைத்தும் பெரிய அளவில் நாசகாரியங்கள் எதிலும் ஈடுபடாதிருந்த ஜமா இஸ்லாமியா, ஹம்ப்அலி தளபதியான பிறகு, தன் உண்மை சொரூபத்தைக் காட்டத் தொடங்கியது. சரியாகச் சொல்வதென்றால், 1990-ம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து.

ஹம்ப்அலி. ஆம், சந்தேகமே இல்லை. அவர் ஜமா இஸ்லாமியாவில் சேராதிருந்திருந்தால், பஷீரால் கண்டிப்பாக அதனை ஓர் அதிபயங்கர இயக்கமாக உருவாக்கியிருக்க முடியாது. சாதாரண எதிர்ப்பு இயக்கமாகத்தான் இருந்திருக்கும். நேரடி அரசியலில்கூட ஈடுபட்டிருக்கலாம். பஷீருக்கு அந்த விருப்பம் கொஞ்சகாலம் இருந்திருக்கிறது. ஹம்ப்அலி என்கிற மனிதர் தன்னுடைய ஆப்கானிய - மத்தியக் கிழக்குத் தொடர்புகளின் மூலம் ஜமா இஸ்லாமியாவுக்கு ஒரு தீவிரமான ஆயுத முகத்தை அளித்தார். பேச்சுவார்த்தைகளில் அர்த்தமில்லை என்கிற கருத்தாக்கத்தை ஆழமாகப் பதிய வைத்தார். அதிரடிகளின் மூலமே அரசை அச்சுறுத்த முடியும், ஆட்டிப் படைக்க முடியும் என்றும் நம்பச் செய்தார். அடுத்த பத்தாண்டு காலத்தில், இந்தோனேஷியாவிலும் ஏனைய கிழக்காசிய நாடுகளிலும் ஜமா இஸ்லாமியா நிகழ்த்திய மிகத் தீவிரமான பல தாக்குதல்களின் மூலம், தென்கிழக்காசியாவின் அல் காயிதா என்கிற பெயரையும் இயக்கத்துக்குப் பெற்றுத் தந்தார்.

யார் இந்த ஹம்ப்அலி?

ஜாவா தீவில் ஒரு சிறு கிராமத்தில் ஏழை விவசாயி ஒருவரின் மகனாகப் பிறந்தவர் ஹம்ப்அலி. மிகப்பெரிய குடும்பம் அவருடையது. சகோதர சகோதரிகளின் எண்ணிக்கை பதின்மூன்று. ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பிட முடிந்தால் யதேஷ்டம். அப்படித்தான் இருந்தது நிலைமை.

மதரஸா ஒன்றில் மத்தியான சாப்பாடு கிடைக்கிறது என்று கேள்விப்பட்டு, ஹம்ப்அலியின் தந்தை தன் குழந்தைகளில் சிலரை அங்கே படிக்க அனுப்பி வைத்தார். உயர் நிலைக் கல்வி வரை அங்கே கற்ற ஹம்ப்அலிக்கு கல்வியைக் காட்டிலும் அங்கு போதிக்கப்பட்ட உடற்பயிற்சிகளும்

ஆயுதப் பரிச்சயங்களுமே வசீகரித்தன. இயல்பில் அவர் மிகப் பெரிய மதவாதியாக இருந்தார். தனது சொல், செயல், சிந்தனை அனைத்தும் இஸ்லாம் போதிப்பதற்குத் துளியும் தள்ளிப்போய்விடாமல் இருப்பதில் தீவிர கவனம் செலுத்தினார். மனிதனாகப் பிறந்துவிட்டபடியால், மதத்துக்கு ஏதாவது செய்தே தீரவேண்டும் என்று நினைத்தார். என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோதுதான், அவருடைய பள்ளி ஆசிரியர் ஒருவர், ஒருநாள் அழைத்தார்.

'ரிதுவன், உனக்கு கடவுளுக்குச் சேவை செய்ய இஷ்டமா?'

'ஆம். சந்தேகமில்லாமல்.'

'அதிகபட்சம் உன்னால் என்ன செய்யமுடியும்?'

'என் உயிரைக் கொடுக்கலாம்.'

'அப்படியானால் நல்லது. நீ உடனே ஆப்கனிஸ்தானுக்குப் புறப்பட்டுவிடு. உனக்குத் துப்பாக்கியால் குறி பார்த்துச் சுடத் தெரியும். குண்டு வீசத் தெரியும். உயிர் பயமும் இல்லை. அங்கே நம் சகோதரர்கள் காஃபிர்களிடம் (இறை நம்பிக்கை அற்றவர்கள்) அடிமைப்பட்டுப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். யுத்தம் புரியப் போதிய ஆள்பலம் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். உன்னைப்போல் வீரமும் தியாக உணர்வும் கொண்ட இளைஞர்களைத்தான், அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீ பிரதிபலனாக எதையும் எதிர்பார்க்காமல் அங்கே போவதென்றால், இன்றைக்கே நான் அதற்கு ஏற்பாடு செய்யமுடியும்.'

நம்புங்கள். அன்றைக்கு ஹம்ப்அலி பள்ளிக்கூடம் முடிந்து வீட்டுக்குப் போகவில்லை. அங்கிருந்தே சில நண்பர்களுடன் பாகிஸ்தானுக்குச் செல்லும் கப்பல் ஒன்றில் ஏறிவிட்டார். 1983-ம் வருடத்தின் ஏப்ரல் மாதம் அது. பல தடங்கல்களுக்குப் பிறகு, இருபத்தாறு தினங்கள் கழித்துத்தான், அவரால் கராச்சி துறைமுகத்தை அடைய முடிந்தது. அங்கிருந்து ஆப்கனிஸ்தான் எல்லைவரை கால்நடையாகவே சென்றடைந்து, அங்கே முன்னதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முகாமில் தங்கி, ஒரு முஜாஹிதீனாகப் பயிற்சி பெற ஆரம்பித்தார்.

ஆப்கன் போராளி இயக்கத் தலைவர்களும் பாகிஸ்தான் உளவுத்துறையும் அந்தக் காலகட்டத்தில் இப்படி வரும் இளைஞர்களுக்குப் பயிற்சியளித்துக் கொண்டிருந்தார்கள். வயிற்றுக்கு ரொட்டி, தோளுக்குத் துப்பாக்கி. இரண்டுக்கும் அங்கே உத்தரவாதம் இருந்தது. அடிப்படை ஆயுதப் பயிற்சிகள் முடிந்த பிறகு, பெரும்பாலும் அவர்கள் ஒசாமா பின்லேடனிடம் அனுப்பப்பட்டார்கள். குறி பிசகாமல் சுடுவது, ஓடியபடி சுடுவது, இரவு நேரத் தாக்குதல்களில் ஈடுபடுவது, குதிரையின் மீது பயணம் செய்தபடி தாக்குதல் நடத்துவது, பதுங்கியிருந்து பாய்வது என்று ஒசாமா தன்னிஷ்டத்துக்குத் தானே கற்றுத் தேர்ந்த பல கலைகளை அவர்களுக்குப் பயிற்றுவித்துக் கொண்டிருந்தார்.

ஹம்ப்அலி, ஒசாமா பின்லேடனிடம் போய்ச் சேர்ந்தது 1987-ம் வருடம். அவரது செட்டில் மொத்தம் இருபத்தொன்பது பேர் இருந்தார்கள். அத்தனை பேரிலும் தலைசிறந்த வீரன் என்கிற அடையாளத்துடன் ஹம்ப்அலி அனுப்பி வைக்கப்பட்டிருந்தபடியால், ஒசாமாவின் சிறப்புக் கவனத்துக்கு வந்தார். குறுகிய காலத்தில் அவரது நம்பிக்கைக்குரிய தளபதிகளுள் ஒருவரானார்.

ஒரு சிறு படைப்பிரிவின் தலைவராக ஹம்ப்அலியை நியமித்து, கந்தஹாருக்கு அனுப்பினார் ஒசாமா. மொத்தம் ஐம்பது பேர் கொண்ட பிரிவு அது. பெரும்பாலும் கெரில்லா தாக்குதல்களுக்கும், அவசியம் ஏற்பட்டால் மட்டும் நேரடித் தாக்குதல்களுக்கும் அந்தப் பிரிவைப் பயன்படுத்தலாம் என்று பிராந்திய கமாண்டருக்கு ஒரு கடிதமும் கொடுத்தனுப்பினார்.

அப்படிப் போன ஹம்ப்அலி என்ன ஆனார், கந்தஹாரில் என்ன சாதித்தார், அப்புறம் என்ன புரமோஷன் கிடைத்தது, எத்தனை முறை ஒசாமாவை அங்கே சந்தித்தார் என்கிற விவரங்கள் எதுவும் கிடையாது. சொல்லப் போனால், யுத்தம் முடிவடையும் வரை அவர் மீண்டும் ஒசாமாவைச் சந்தித்தாரா இல்லையா என்கிற விவரம் கூட இல்லை. இடையில் ஒரே ஒரு முறை அவர் இந்தோனேஷியாவுக்குத் திரும்பி வந்து, தனது குடும்பத்தாருடன் ஒரு வார காலம் தங்கியிருந்திருக்கிறார். எங்கே போனாய், என்ன செய்தாய், செய்கிறாய் என்கிற வீட்டுக் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கவில்லை. மாறாக, ‘என் பாதை எனக்குத் தெரிந்து விட்டது. இனிமேல் குடும்பப் பொறுப்புகள் எதையும் நான் ஏற்பேன் என்று மட்டும் எதிர்பார்க்காதீர்கள்’ என்று சொல்லியிருக்கிறார்.

‘கெட்ட பழக்கங்களோ, ரவுடி சகவாசமோ, ஊர் சுற்றும் வழக்கமோ இல்லாத பையன். ஒரு சினிமாவுக்குக் கூடப் போகாதவன். எப்போதும் பக்தி, பிரார்த்தனை, தொழுகை, மசூதி என்று மட்டுமே இருக்கிறவன்.’ எனவே, குடும்பத்தாரால் அவரைச் சந்தேகப்பட முடியவில்லை. ஏதோ நன்றாக இருந்தால் சரி என்றுதான் நினைத்தார்கள். தவிரவும் ஆப்கனிஸ்தானுக்குப் போய்வந்த காலத்தில், ஹம்ப்அலியின் உடல் உறுதியும் வலுப்பட்டு, சற்று ஆரோக்கியம் கூடியிருந்தது. பழைய பசித்திருந்த இளைஞனாக இல்லை. கொஞ்சம் சதை போட்டிருந்தார். ஆனால், ஊளைச் சதை இல்லை. அவர் பார்வையில் மின்னல் வெட்டு போல் ஓர் ஒளி தெரிந்தது என்று ஹம்ப்அலியின் சகோதரர் ஒருவர் அந்தக் காலகட்டத்தில் சொல்லியிருக்கிறார். பெரிய பக்திமானாக உருமாறி, ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருக்கிறார் என்று நினைத்திருப்பார்கள் போலிருக்கிறது.

ஆனால், அவர் அந்த ஒரு வார காலத்துக்குப் பிறகு, மீண்டும் சொல்லிக் கொள்ளாமல் ஆப்கனுக்குப் புறப்பட்டுப் போய், யுத்தம் முடிந்து திரும்பிய பிறகு, அவர்களுக்குச் சந்தேகம் தீர்ந்துவிட்டது.

ஹம்ப்அலி ஒரு ஜிஹாதி. இனி நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை.